Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 21    05 - 07 - 1992    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 138

## க.பொ.த. உயர்தரபரீட்சை உறுதிப்படுத்த முயற்சி

அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த. உயர்தரப் பரீட்சை யாழ். மாவட்டத்திலும் நடாத்தப்படுவதை உறுதி செய்வதற்காக யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மிகவிரைவில் கொழும்பு செல்ல வுள்ளார். இப்பரீட்சையை யாழ் மாவட்டத்தில் நடாத்தப்படுவதற்கான சூழ் நிலைகள் சீரற்றுக் காணப்படுகின்றன. இப்பரீட்சைக்கான வினாத்தாள்களும் காகிதாதிகளையும் யாழ்ப்பாணம் எடுத்து வருவதில் பல சிரமங்கள் தோன்றி யுள்ளன. இம்மாவட்டத்திற்கான தரைமார்க்கமான பாதை பாதுகாப்பற்றதாக காணப்படுவதால் இதனூடாக இவற்றை எடுத்துவருவது [4ஆம் பக்கம் பார்க்க]

# யாழ்ப்பாண குடாநாட்டை துண்டிப்பதற்கு முமுனைகளில் இராணுவம் ஊடுருவல்

## தடுத்துநிறுத்த புலிகள் கடும்போர்

(யாழ்ப்பாணம்)

**வட மாகாணத்தின் பிரதான நிலப்பரப்பிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டை துண்டித்து விடும் போர் முறைத் திட்டத்தின் அடிப்படையில் கடந்த ஒரு வாரமாக சிறிலங்கா இராணுவம் பெரும் படையெடுப்பை நடத்தி வருகிறது. இந்தப் போர்முறைத் திட்டத்தின்படி வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு இராணுவ முகாம்களிலிருந்து மும்முனைகளில் படைகளை நகர்த்தி கொம்படிப் பாதையை துண்டித்துவிடுவதே இராணுவத்தின தந்திரோபாயமாகும். ஆயினும் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த்தாக்குதல் இராணுவத்தினரின் இத் தந்திரோபாயத்திற்கு பெரும சவாலாக அமைந்துள்ளது**

யாழ். குடாநாட்டை வட மாகாணத்தின பிரதான நிலப் பரப்புடன் துண்டித்துவிடும் நோக்கத்துடன் கடந்த ஒரு வார காலமாகப் பெரும்படை எடுப்பொன்றை நடத்திவருகி றது சுமார் 6,000 இராணு வத்தினருடன் டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இப் படையெடுப்பு இடம்பெற்று வருகின்றது. இப்படையெடுப பிறகு விமானப்படை குண்டு வீச்சு விமானங்களும், கடற் படைப் பீரங்கிப் படகுகளும் உதவியாக பலத்த குண்டுவீச் சுத் தாக்குதலையும், பீரங்கித் தாக்குதலையும் நடத்திவரு கின்றன.

கொம்படி, ஊரியான் பாதை கள் ஊடாகப் பிரதான நிலப் பரப்புடன் நடைபெறும்போக் குவரத்தை துண்டித்து குடா நாட்டை இராணுவ முற்று கைக்குள் கொணர்வருவதே இதன் நோக்கமாகும். இந்நோக் கத்தை அடைவதற்கென மும் முனைகளில் படைகளை நகர்த் திச்செல்ல சிறிலங்கா இராணு வத் தரப்பினர் முயற்சிக்கின்ற னர்.

கட்டைக்காட்டிலிருந்து நித் தியவெட்டை நோக்கி ஒரு அணியும் வெற்றிலை கேணி யில் இருந்து புல்லாவெளி நோக்கி ஒரு அணியும் வெற்றி லைக்கேணியிலிருந்துபெரியபச் சிலைப்பள்ளியூடாகமண்டலாய் நோக்கி ஒரு அணியும் நகர்த் தப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

**வீரவேங்கை இளம்பிறை**

**வீரவேங்கை மருதன்**

04-07-92 அன்று புல்லா வெளியில் இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விடுதலைப் புலி கள் போராளி ஒருவர் வீரச் சாவடைந்தார். வீரச்சாவடை ந்தவர் வீரவேங்கை இளம் பிறை (சின்னத்தம்பி விக் னேஸ்வரமூர்த்தி முகாவில் இயக்கச்சி) என்னும் போராளி யாவார்.

## புல்லாவெளி இராணுவத்தின் முன்னேறும் முயற்சி முறியடிப்பு;

### எறிகணை, குண்டுவீச்சு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

டாய், யக்கச்சி, ஆகிய பகுதி

தல்களும் இடம் பெற்றுவரு

## இன்று கரும்புலிகள் தினம் குடாநாட்டில் நினைவுக்கூட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

கரும்புலிகள் தாம் சாகப் போகும் திகதியை நேரத்தை தன் உடல் எப்படிச் சிதறப் போகிறது என்பதைத் தெரி ந்து கொண்ட மன நிறை வோடு மகிழ்ச்சியோடு அதனை அரவணைத்துக் கொள்கின்ற னர் உலக வரலாற்றில் இது அதிசயம் மட்டுமல்ல அதிர்ச் சியையும் ஏற்படுத்தி வரும் அற்புதமான உண்மை.

இவ்வாறு கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு யாழ். மாவட்டச் செய லகம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது; எமது தாயகத்தின் விடியலு க்காக ஒவ்வொரு விடுதலைப் புலியும் இந்த மண்ணில் சரி யும் போது ஒவ்வொரு சரித் திரம் பிறக்கிறது அந்த வகையில் கரும்புலிகளின் வீரச்சாவுகள் வித்தியாசமா னவை.

எதிரியானவர் எத்தகைய பெரிய இராட்சத கவசவண்டி

தாலும் தளராத எமது தலைமை எமது தாயகத்தை விடுவித்து எமது மக்களுக்கு சுதந்திரமான சுபீட்சமான வாழ்வைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை இவர்கள் தங் கள் நெஞ்சங்களிலே சுமந்து சென்றவர்கள்.

இந்த கரும்புலி காவிய வர லாற்றின் மூத்த மகன் கரும் புலி கப்டன் மில்லர் (வல்லி புரம் வசந்தன் துன்னாலை வீரச்சாவு 05-07-87)

ஆரம்பித்து வைத்த யாக வேள்வியில் இதுவரை-

கப்டன் கொலின்ஸ் (பர் ணாந்து சில்வெஸ்ரர் மன்னார் வீரச்சாவு 10-07-90)

கப்டன் வினோத் (வேலுப் பிள்ளை தியாகராசா வல் வெட்டித்துறை வீரச்சாவு 10-07-90)

மேஜர் காந்தரூபன் (யோக ராசா கோணேஸ்வரன் வல் வெட்டித்துறை வீரச்சாவு 10-07-90)

மேஜர் டாம்போ (கா. தயா பரன் முருங்காவில் வீரச்சாவு 19-03-91)

லெப் கேணல் போர்க் மா. அரசரெத்தினம் சேமமடு வீரச்சாவு 23-11-90)

கப்டன் சிதம்பரம் (பெரிய தம்பி சந்திரன் வல்வெட்டித் துறை வீரச்சாவு 05-05 91)

(4ஆம் பக்கம் பார்க்க)

## மகளூர் முனைத்துறையில் 3புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மகளூர் முனைத்துறை என் னுமிடத்தில் இயக்க வேலை க்காகச் சென்று கொண்டிரு ந்த விடுதலைப் புலிகளுக்கும் பதுங்கியிருந்த சிறிலங்கா விசேட அதிரடிப் படையின

வேங்கை மதிவதனன் (தம்பி ஐயா மதிவண்ணன், கோட் டைக்கல்லாறு. கல்லாறு), வீர வேங்கை நாவேந்திரன் (கந்த வனம் மகேந்திரராஜா கோட் டைக்கல்லாறு. கல்லாறு) வீர வேங்கை வர்ணன் (நல்லதம்பி இராஜேந்திரன் கோட்டைக்

புலொலவெளிப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை இரு தடவைகள் முன்னேறும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இம் முயற்சிகள் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த் தாக்குதல்களால் முறியடிக்கப்பட்டன.

இதேவேளை இப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் கடும் குண்டு வீச்சுத்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் இப்பகுதியை அடுத்துள்ள மண்

---

## விமானங்கள் நோட்டம்

(குருநகர்)

நேற்றுக் காலை 8-15 மணியளவில் சீ - பிளேன் ஒன்று யாழ் நகரின் கிழக்குப் பகுதிக்கு மேலாக வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்தது.

பிற்பகல் 3-30 மணிக்கு கிழக்குத் திசையில் இருந்து வந்த இரு பொம்பர்கள் யாழ். நகரை ஒருதடவை மிக உயரத்தில் வலம் வந்து திரும்பவும் கிழக்கில் சென்று மறைந்தன.

பொம்பர்கள் நகரில் நுழைந்ததை அடுத்து பொதுமக்கள் பீதியால் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர். பொம்பர்கள் சென்றதும் நிலைமை சீரடைந்தது [21]

## 'பரா' வெளிச்சம்

(குருநகர்)

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவுச் சந்தி சிறிலங்கா இராணுவக் காவலரண் பகுதியிலிருந்து யாழ் கோட்டை அலுப்பாந்திப் பகுதிகளை குறிவைத்து அடிக்கடி இராணுவத்தினர் வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டிருந்தனர்.

இதன் காரணமாக கரையோரப் பகுதிகளில் நாள். மீன் தொழிலில் ஈடுபடுபவர்கள் தொழிலைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டனரென்று அறியப்படுகிறது.

(21)

களில் பலத்த விமானக்குண்டு வீச்சும், எறிகணைத் தாக்கு

வதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

03-07-92 அன்று புல்லா

[4 ஆம் பக்கம் பார்க்க]

# சுன்னாகம் பகுதியில் பலத்த குண்டு வீச்சு தாக்குதல்

### ஒருவர் பலி; 7 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் நேற்று மாலை விமானக் குண்டு வீச்சில் ஒருவர் பலியானார் ஏழு பேர் காயமடைந்தனர் நான்கு வீடுகள் முற்றாக சேதமடைந்தன.

நேற்று மாலை 5. 30 மணியளவில் சுன்னாகம் பகுதிகளை சுற்றிவட்டமிட்ட இரு பொம்மர்கள் முத்துக்கிருஷ்ணன் ஒழுங்கை, நாகம்ஸ்திரையரங்கு ஆகிய பகுதிகளை நோக்கி அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசின இதில் ஒருவர் உடல் சிதறி பலியானார், ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த நகம்ஸ் திரையரங்கடி சுன்னாகத்தைச் சேர்ந்த தேவதாஸ்சிவமணி(48 வயது), செல்லம்மா சுப்பிரமணியம் (55 வயது), சின்னத்துரை யோகேஸ்வரி (54 வயது), சந்தையா வல்லிபுரம(65 வயது), ஐ. உலாநந்தன் [39 வயது), உ சுமித்திரா (04 வயது ஆகியோர் யாழ் போதனா வைத்திசாலையின் அவசர சிகிச்சைப்பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [பா]

## ஒட்டிசுட்டான் பகுதியில் விமானக்குண்டு வீச்சு

### நால்வர் பலி; பலர் காயம்

(ஒட்டிசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளன இத்தாக்குதலில் நாலுபேர் பலியாகினர் பலர் காயமடைந்தனர்

நேற்று முதினம் இச்சம்பவம் இடம்பெற்றது குமுழமுனை, அலம்பில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து ஒட்டிசுட்டானில் தங்கியிருந்தோரே இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

## பதுங்கு குழி அமைத்தல் குடாநாட்டில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் மக்கள் பதுங்கு குழிகளை அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்

சிறிலங்கா விமானப்படையினரது விமானக் குண்டுத் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்கும் நோக்குடன் ஒவ்வொரு வீடுகளிலும் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிலர் பழைய பதுங்கு குழிகளை புனரமைப்பதையும் சிலர் புதிதாக பதுங்கு குழிகளை அமைப்பதையும் அவதானிக்க முடிகிறது. (க)(பா)

## வீரச்சாவு



லெப். நீலவாணன



லெப். மல்லன்

03-07 1992 அன்று திருமலை பன்குளத்தில் விமானப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

களை, கப்பல்களை கொண்டு வந்தாலும் எவ்வளவு பெரிய தளத்தை அமைத்தாலும் எமது உடல்களால் அத்தனையையும் தகர்த்து எறிய முடியும் என்பதை இவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள்.

எத்தனைய தடைகள் வந்

விசேட அதிரடிப் படையினருக்கும் இடையே மோதல் ஒன்று இடம் பெற்றது.

29-06-1992 அன்று இடம் பெற்ற இம்மோதலில் மூன்று வேங்கைகள் வீரச்சாவு அடைந்தனர்

வீரச்சாவடைந்த வீர

இராஜேந்திரன் கோட்டைக் கல்லாறு. கல்லாறு) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மூதூரில் 2 பொதுமக்கள் இராணுவத்தால் கைது

(திருக்கோணமலை)

மூதூர் ஜி. பி. எஸ் முகாமிறகு புலைப்படத்தை உறுதிப்படுத்திக் கொள்ளச்சென்ற 02 பொது மக்களை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கடந்த வியாழனன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் செல்லையா ஆனந்தன் (வயது 30 7 ஆம் வட்டாரம் கடடைபறிச்சான், நந்தகுமார் சிவா (வயது 26) 7 ஆம் வட்டாரம் கட்டை பறிச்சான் ஆகியோரே இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

## குமண கப்பல் இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

''குமண'' என்ற கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் ஊரடங்கு அமுலில் உள்ள தால் கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் வேலைகள் நடைபெற முடியாதிருக்கும் என்று கூறப்படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ முகாமிற்கு மத்தியில் தமிழர்கள் குடியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பஞ்சத்தொடுவாயில் சிறிலங்கா இராணுவ முகாம்கள் நெருக்கமாகவுள்ள பகுதியில் 420 தமிழ் குடும்பங்கள் தற்பொழுது பலாத்காரமாக குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பஞ்சத் தொடுவாய் கிராமத்தை அடுத்துள்ள பகுதியில் ஏற்கனவே முஸ்லிம்கள் நிரந்தரமாக குடியமர்த்தப்பட்டுள்ளனர். முஸ்லிம்களினதும் இராணுவத்தினதும் நெருக்கடிக்கு மத்தியில் இப்பகுதியில் குடியேற்றப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள தமிழர்கள் சுயவிருப்பத்தின் பேரிலேயே குடியமர்த்தப்பட்டுவருவதாக சிறிலங்கா அரசு தெரிவிக்கின்றது. கடந்த பெப்ரவரி தொடக்கம் ஏப்பிரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் அம்பாறையில் வீரமுனை, சொறிக்கல் முனை மட்டக்களப்பு, கல்மடு உட்பட 13 தமிழ்க் கிராமங்களில் தமிழ் மக்கள் பலர் பலவந்தமாக குடியமர்த்தப்பட்டனர்.

பல இடம் பெயர்ந்தோர் முகாம்களில் சிறிலங்கா இராணுவத்தினர் சென்று தமிழர்களை மீளக் குடியேறுமாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா ஜனாதிபதி பிரேமா ஒக்டோபரில் இந்திய விஜயம்

(மல்லி)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளுக்கு எதிர்வரும் செப்டெம்பர் இறுதியில் செல்ல திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

'சார்க்' அமைப்பின் தலைவர் என்றமுறையில் அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு செல்ல இவர் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

செப்டம்பர் இறுதியில் பாகிஸ்தானுக்கும், அக்டோபர் ஆரம்பத்தில் இந்தியாவிற்கும் இவர் செல்வார்.

1989 இல் இவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின் வெளிநாடு செல்ல திட்டமிட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

## வரி விளம்பரம்

**புதிய வகுப்புக்கள்**

*Yogi Home Science Accadamy Cake Iceing and Sugar Craft Classes (Wilton Method) and General Cookery* புதிய வகுப்புக்கள் 11-7-92 சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்: 71B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர். [2752]

**தேவை**

லோங்ஸ், சேட், பூவேலை நன்கு தெரிந்தவர்கள் உடன் தேவை. ''ஜெகா தையலகம்'' 729 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (2757)

**விற்பனைக்கு**

C70 மோட்டார் சயிக்கிள் (Ecno Power), லேடீஸ் சயிக்கிள், ஏசியா சயிக்கிள், பிள்ளைத் தொட்டில், ஜெனரேற்றர், ஆட்டுக்கல் தொடர்பு:- வளர்மதி, ஜெனறல் மோட்டோர்ஸ், 10 பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (2764)

மில்லில் அரைக்க, உடைத்து தீட்டுவதற்கு ஏற்ற பாவனைக்குரிய 22 கோஸ் பவர் எஞ்சின் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஜெயந்தி மில் சுழிபுரம். (சி-4653)

## வைத்தியசாலை இடம் மாற்றம்

(நமது நிருபர்)

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் இயங்கிவந்த தெல்லிப்பழை ஆரம்ப மருத்துவமனை இன்று முதல் கந்தரோடை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம் வலிவடக்கில் இடம்பெற்ற விமானப் படையின் குண்டுவீச்சுத் தாக்குதலுக்கிலக்காகி மேற்படி வைத்தியசாலைக் கட்டடம் தரைமட்டமானதும் தளபாடங்கள் மற்றும் வைத்தியசாலை உபகரணங்கள், ஆவணங்கள் ஆகியன முற்றாக அழிந்ததும் தெரிந்ததே.

தற்போது மேற்படி வைத்தியசாலை நிர்வாகத்தின் தீவிர முயற்சியால் புதிய கட்டடத்தில் நோயாளர் நலன்கருதி வைத்தியசாலை மீண்டும் செயற்படவுள்ளது.

சர்வகட்சி மாநாட்டு

## செலவீடுகள் பற்றி சுத. கட்சி எம். பி. கேள்வி

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு அமைக்கப்பட்ட நாள் முதல் இம் மாநாட்டில் எத்தனை கூட்டங்கள், கருத்தரங்குகள், பேச்சுவார்த்தைகள், நடத்தப்பட்டுள்ளன என்பதையும் மேற்படி கூட்டங்கள், கருத்தரங்குகள், பேச்சுவார்த்தைகள், நடாத்தப்பட்ட மொத்த காலத்தை மணித்தியாலங்களில் எவ்வளவென்பதை பிரதமர் அறியத்தருவாரா? என்ற கேள்வியை எழுப்புவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி ஒருவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

கொழும்பு மாவட்ட எம். பி. யான நிமல் சிறிபாலா டி. சில்வா எழுப்பவிருக்கும் மேற்படி கேள்வியில் மேலும் இம் மாநாடு தொடர்பாக ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், மேலதிகநேரக் கொடுப்பனவு, போக்குவரத்துச் செலவு, மாதச் சம்பளம் உட்பட எவ்வளவு தொகைப்பணம் இதுவரை செலுத்தப்பட்டுள்ளது என்பதையும், வீட்டுக்கூலி, மின்சாரம், தொலைபேசிக் கட்டணம், இடத்தைப் பழுது பார்த்தல், எழுதும்கருவிகள், உபகரணங்கள் என்பன உட்பட வேறு செலவுகளுமாக சேர்த்து மாநாடு ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை செலவான மொத்த தொகை என்ன என்பதையும் அறியத் தருவாரா? என்றும் கேட்கப்படவுள்ளது.

அத்துடன் சர்வகட்சி மாநாட்டில் இதுவரை நடந்த கூட்டங்கள், கருத்தரங்குகள், பேச்சுவார்த்தைகள் முதலியவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்ன? அந்தத் தீர்மானங்களில் எந்தெந்த விடயங்கள், பிரச்சினைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் கேட்கப்படவுள்ளது.

## மத வழிபாட்டு இடத்தில் போதைப் பொருள் மீட்பு

சிலாபம் பகுதியில் இருக்கும் மதவழிபாட்டு இடம் ஒன்றிலிருந்து நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப மதவழிபாட்டிடத்தினுள் பொலிசார் பிரவேசித்த போது அங்கு எவரும் காணப்படவில்லையென்றும் பொலிசார் கூறியுள்ளனர்.

## அமெரிக்க-சிறிலங்கா உறவு மேலும் பலனடையும் -பிரேமதாச நம்பிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையே இருந்து வரும் மனப்பூர்வமான சிநேக உறவுகள் இரண்டு நாடுகளினதும் பரஸ்பர நலன்களுக்காகத் தொடர்ந்தும் பலனடையும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சுதந்திரப் பிரகடனம் செய்த இருநூற்றுப் பதினாறாவது ஆண்டு விழா கொண்டாடப்படுவதையொட்டி அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

## சிறையில் பிரபல கேடியின் ஆடம்பர வாழ்க்கை

(கொழும்பு)

கொழும்பு மருதானையில் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட வன்ஷொட் என்ற பிரபல கேடி சிறையில் இருக்கும் போது எவரும் பெற்றிராத ஆடம்பர வசதிகளை பெற்றாராம்.

சிறைச்சாலையில் இருந்த அதிகாரி ஒருவரால் இந்த நபருக்கு சிறைச்சாலையிலே ஆபாச வீடியோ படங்கள் பார்க்கும் வசதி விபசாரிகளிடம் செல்லும் வசதி, சிறைக்குள்ளே உணவு சமைத்துக் கொள்ள காஸ் அடுப்பு வசதி தேவையான இறைச்சி மீன் வகைகள் கிடைக்கும் வசதி போன்றவை செய்து கொடுக்கப்பட்டன என்றும்.

இவை அதிகாரிகளின் அனுசரணையுடன் தான் வன்ஷொட்டுக்கு கிடைத்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## விமல் நவீன சிகை அலங்கரிப்பு நிலையம்


ஆண்கள், பெண்கள், சிறியோர் பெரியோர் அனைவருக்கும் புதிய நிர்வாகியின் கீழ் சிகை அலங்கரிக்கப்படும்

இடம்

விமல் நவீன சிகை அலங்கரிப்பு நிலையம்
(யாழ். பல்கலைக்கழகம் முன்பாக)
சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

V சுரேஸ் சிகை அலங்கரிப்பாளர்

(2753)



## வெற்றிலைக் கேணியிலிருந்து மண்டலாய் கோயிலடியை நோக்கி முன்னேறிய இராணுவத்துடன் நேற்றுமுன்தினம்நடந்த மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 8 பேர் வீரச்சாவைத்தழுவிக் கொண்டனர்



கப்டன் மருதவாணன் (உமேஸ்)
(கந்தசாமி மணிமாறன் திருஞானசம்பந்தர் வீதி, திருமலை)



லெப்டினன்ட் ராஜேஸ்
(கந்தையா சிறிசுதாகர் தாழையடி, ஆழியவளை, யாழ்ப்பாணம்)



லெப். ரமணன்
(காளிமுத்து முருகானந்தன் அடம்பன், மன்னார்)



2-ஆம் லெப். கரன்
(செல்வராஜாமருமகுமார் நீர்வேலி தெற்கு நீர்வேலி)

சிந்துபாடி வெங்கொடுமைச்
செருவினில் ஆடிய மாவீரர்

## நினைவு கூருகின்றோம்... 1992-07-05

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின்போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய -

கப்டன் மில்லர் [வல்லிபுரம் வசந்தன் -துன்னாலை தெற்கு.]

இதே தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

வின்சன் [சரவணமுத்து சரவணபவன்-பட்டிப்புலவு, நெடுங்கேணி, மணலாறு ]

மேஜர் கமல் [துரைரத்தினம் பரமேஸ்வரராசா - பருத்தித்துறை.]

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தம்பதி,

1989 ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ ரகு (பத்தக்குட்டி மனோகரன் - மணற்சேனை, மூதூர், திருக்கோணமலை )

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட -

மட்டக்களப்புப் பிரதேசப் படைத்துறை ஆணையாளர்-

★ கஜன் [மார்க்கண்டு நிஷாகரன் - அன்புவழிபுரம், திருக்கோணமலை ]

★ முருகன் (கைலாசபதி அன்பழகன் - அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.)

மல்லாகத்தில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட -

★ யோசப் [ஜோன்பிள்ளை யோசப் - அளவெட்டி]

★ ஜோண்சன் (குலசதாசன் ஜோண்சன்-தையிட்டி காங்கேசன்துறை ]

★ சந்திரன் (சந்திரவதனன் - பருத்தித்துறை)

1990 ஆம் ஆண்டு அம்பாறை கஞ்சிகுடியாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

முயற்சியால் புதிய கட்டடத்தில் நோயாளர் நலன்கருதி வைத்தியசாலை மீண்டும் செயற்படவுள்ளது.

இங்கு திங்கட்கிழமைகளில் பொதுச்சிகிச்சையும் செவ்வாய்க்கிழமைகளில் குழந்தைகளுக்கான சிகிச்சையும் சனிக்கிழமைகளில் சலரோகச் சிகிச்சையும் நடைபெறும் என தெரிய வருகிறது. (ச)

## ஓவியதிரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்திரு நாட்டிற்குப் புகழ் சேர்த்த ஓவியர் அமரர் பெனடிக்ற் அவர்களின் ஓவியம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3 00 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

ஓவியர் பெனடிக்ற் அவர்கள் கைவண்ணத்தில் உருவான ஓவியங்களும் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

## உற்சவம்

(பருத்தித்துறை)

தென் புலோலி புற்றளை சித்திவிநாயகராலய இரதோற்சவம் இம்மாதம் 13 ம் திகதியும் தீர்த்தோற்சவம் மறுநாளான 14ம் திகதியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [25]

★ ★ ★

[பருத்தித்துறை]

பருத்தித்துறை சிவன் கோவிலில் இன்று தேர்த்திருவிழாவும் நாளை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுகின்றன. [25]

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் பேரவைச் செயலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வாறு கல்வி மேம்பாட்டுப பேரவையினா சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

சிந்துபாடி வெங்கொடுமைச்
செருவினில் ஆடிய மாவீரர்



2ஆம் லெப். பானுமதி
(புஸ்பநாதன் தர்சினி
சிறிவாணி
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்)



வீரவேங்கை
கலைக்கொடி
(நடராஜா அம்பிகாதேவி
கோயில் தோட்டம்)



வீரவேங்கை செந்தில்
(சின்னத்துரை
சிறிபத்மராசா
ஊரெழு மேற்கு, சுன்னாகம்)



வீரவேங்கை
இயல்வாணன் (கஸ்ரோ)
(சோமசுந்தரம்
கமலநாதன்
வாகிகளவு, காரைநகர்)

## 02-07-92 மான்தீவில் வீரச்சாவடைந்தோர்



2ஆம்லெப் சிவகாந்தன்
(சுப்பிரமணியம்
நித்தியானந்தன்
உடுத்துறைவடக்குதாளையடி)



லெப்டினன் மறவன்
(வில்வம்)
(ஜெயபால்பர்னாந்து
பீலிக்ஸ் றொனால்ட்
வெற்றிலைக்கேணி, யாழ்.)



லெப். திருவருள்
(தம்பையா கைலநாதன்
வேரவில், பூநகரி.)



2-ம் லெப்டினன்
கதிர்ச்செல்வன்
திமோத்தேயுஜேசுதாசன்
வலைப்பாடு, பூநகரி.

சிங்களப் படைகள் சிதைந்து அழிந்திட
தங்களுயிர் தந்த வேங்கைகள்

1990 ஆம் ஆண்டு அம்பாறை கஞ்சிகுடியாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**ரமணன்** (சோமசுந்தரம் திருச்செல்வம் - காரைதீவு அம்பாறை.)

**சுந்தர்** (தம்பிலுவில், அம்பாறை.)

**கஜமோகன்** [கண்ணகிபுரம், மட்டக்களப்பு.]

திருக்கோணமலை / பன்குளம் 10-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் திலகன்** (வீரசிங்கம் திலகரட்ணம் - தம்பலகமம, திருக்கோணமலை.)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் பிரதீப்** (சுப்பிரமணியம் சதானந்தராசா - கொக்குத் தொடுவாய், மணலாறு.)

ஆனையிறவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கண்ணிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**திலீப்** (கந்தசாமி கண்ணன் - கல்லுப்பிட்டி, கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி.)

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

திருக்கோணமலை / மூதூர், வெருகல் முகத்துவாரம், ஈச்சிலம்பத்தைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 38 தமிழர்கள் - சந்தளாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 24 தமிழர்கள்.

பச்சனூர்ப் பகுதியில் தேவாலயம் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட குண்டு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

இதே ஆண்டு சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

★ மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4651)

## சிந்தனைக்கு

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

- திருவள்ளுவர்.

ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 05-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05

# ஐந்தாண்டு சேவையில் 'ஜெய்ப்பூர்' நிறுவனம்

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் தனது ஐந்தாவது ஆண்டு நிறைவு தினத்தை இன்று நிறைவு செய்கின்றது. பல நெருக்கடிகளின் மத்தியிலும் தொடர்ந்து இயங்கி வரும் இச் செயற்கைக்கால் நிறுவனத்தின் பணி பாராட்டிற்குரியதொன்றாகும்.

இன்றைய சூழ்நிலையில் இச் செயற்கைக்கால் நிறுவனத்தின் தேவையும், பணியும் மிகமிக அவசியமானதாகும். அதேவேளை, இந்நிறுவனம் இக்காலப் பகுதியில் இயங்குவதென்பது மிகவும் நெருக்கடியானதொன்றாகவே உள்ளது என்பது கடந்த காலப் பகுதியில் இந் நிறுவனம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

பொதுவாகவே அமைதியான காலப் பகுதியில் செயற்கை அவய நிறுவனம் ஒன்றின் பங்கு பணியை விட யுத்த காலத்தில் அதன் பங்கு பணி வேறுபட்டதும், முக்கியமானதுமாகும். அதிலும் திட்டமிட்ட ரீதியில சிங்கள பேரினவாத சக்தியின் மேற்கொள்ளும் இனஅழிப்பு நடவடிக்கைகளின்போது இவற்றின் பணி மிகவும் கட்டாய தேவையும் ஆகின்றது இவற்றின் பொறுப்பும் பெரியதாகிறது.

சிங்கள அரசாங்கம் திட்டமிட்ட ரீதியில் பாரிய இனப்படுகொலையைப் புரிந்துவருகின்றது இதன் பிரதிபலிப்பாக அங்கவீனர்களின் தொகையும் பல மடங்கு அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் அங்கவீனர்களை ஒரு சமூகத்தின் சுமையாகக் கருதாமல், அதேவேளை அங்கவீனர்கள் தமது வாழ்க்கை குறித்து அவநம்பிக்கை கொள்ளாமல், மனோதிடத்துடன் வாழ வழி செய்ய வேண்டியது சமூகத்தின் கடமையாகும். இப்பணி மிகவும் கடினமாயினும், அதன் ஒரு பகுதியை யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் ஆற்றிவருகின்றது

பொருளாதாரத்தடை, எரிபொருள் தடை குறிப்பிட்ட பொருள்களுக்கான தடை என்பனவற்றால் தமிழ்மக்கள் பாதிக்கப்படுள்ளது போன்றே கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஜெய்ப்பூர் செயற்

## நேற்றைய தொடர் நிகழ்ச்சி நிரல்

குறைந்த வருமானமுள்ள லட்சக்கணக்கான ஆபிரிக்க அமெரிக்க இன மக்கள் மிகவும் ஆழமானதும் நிரந்தரமானதுமான துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்ற பரவலான உணர்வு கறுப்பினத்தலைவர்களின் சகல பிரிவினரையும் உணர்வுபூர்வமான கவலைக்குள்ளாக்கி வருகிறது. என் ஏ.ஏ.சி.பீ போன்ற மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றிய இதனால் புதிய வினாக்கள் எழுகின்றன. இது கறுப்பின 'அமெரிக்கர்களின் பாரம்பரிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை மீளாய்வு செய்ய அவர்களைத் தூண்டுகின்றது. அந்த நிகழ்ச்சிநிரல் வாக்களிக்கும் உரிமைகள், தெரிவுசெய்யப்படும் செயலகங்களின் பதவிகளுக்கான தகுதிகள் விரிவாக்கப்பட்ட தொழில்வாய்ப்பு கல்வி என்பனபற்றி விரிவாக இடித்துக் கூறுகிறது. இவ்வகையான உறுதிப்பாடு நிறைந்த நடவடிக்கைகள் பழமைவாதிகளின் தாக்குதலுக்கிலக்கான போதும் சமகாலந்தர்ப்பத்துக்கான இந்த 20 ஆண்டுகாலப் போராட்டம்ஆபிரிக்க அமெரிக்கஇனமக்களின் பிரதான பொருளாதார நீரோட்டத்திற்குள் இட்டுச் சென்றுள்ளதோடு பாதிக்கப்பட்டவர்கள், பின்தள்ளப்பட்டுள்ளார்கள்.

''எமக்கு இரண்டு லாபங்கள் கிடைத்தன' என்கிறார் கிளேவ்லண்ட் 'மேயர் மைக்கல் வைற்'' கறுப்பின மக்களில் ஒருதொகுதியினர் மிகவும் சிறப்பாக முன்னேறியுள்ளனர். பொருளாதார ரீதியிலாவது அவர்கள் சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளனர் என்று கூறலாம். அடுத்த ஒரு கறுப்பின அமெரிக்கர்களின் தொகுதி பொருளாதாரக் கிணற்றின் அடித்தளத்தில் உள்ளவர்கள் அவ்வதை செங்குத்துப்பாறையில் வீழ்பவர்களை உள்ளடக்கும் அந்தக் குழு வளர்ந்துவரும் குழுவாகும்''

இப்போதுள்ள பிரச்சினை. எஞ்சியுள்ள பாரபட்சத்தடைகளை உடைத்தெறிவது போதுமானதா அல்லது குறைந்த வருமானமுள்ள கறுப்பின மக்களை அவர்களுடைய சமூகப் பிரச்சினையிலிருந்து மீட்டெடுப்பதற்காக

## ஓர் இனமென்ற தன்மையை இழந்து வருவதாக

# அமெரிக்க கறுப்பர்கள் மத்தியில் தோன்றியுள்ள பேரச்சம்

போராட்டத்தை யார் முன்னின்று நடத்துவதென்பதும் எவ்வாறு அதைச் செய்ய முடியும் என்பதும் தான். ஜோர்ஜ் புஷ்ஷை விடுத்து பில் கிளின்டனைப் பற்றியும் ஜெரி விறவுணைப் பற்றியும் பல ஆபிரிக்க அமெரிக்க தலைவர்கள் மிகநம்பிக்கையற்று இருக்கின்றார்கள். வளர்ந்து வரும் அமெரிக்க நகரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள இவர்கள் இருவரும் தயாராக உள்ளார்களா என்ற ஐயப்பாடு அந்த மக்களிடையே இருந்து வருகின்றது. நியூஸ் வீக்கின் கருத்துக்கணிப்பின்படி சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு 'அரசை வற்புறுத்துவதே' வழி என்பதை 24வீதம் கறுப்பின வளர்ந்தோர் மட்டுமே ஆதரிக்கின்றார்கள். '100 கறுப்பு மனிதர்கள் போன்ற இயக்கங்கள் நகரிப்புறத்திலே வாழுகின்ற இளைஞர்களை அணுகுவதற்கு அடித்தளத்திலிருந்து பாடுபட்டுவருகின்றார்கள். தெனி கிறிஸ்தவ தலைமைத்துவ மாநாடு பத்துப் பிரதான நகரங்களில் கொலையைநிறுத்து' பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள் நாடளாவிய ரீதியில் 'குழந்தைகளைக் காப்பாற்று இயக்கத்தை முன்னெடுத்த நாஸ்பெரி கறுப்பின அமெரிக்க மக்கள் இன்னமுமே '60களின் அடிமைகளாகவே' வாழ்கிறார்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார் அவர்களுடைய அரசியல் இலக்கும் அத்தகையதாகவே இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். இனவாதமும், ஏழ்மையும் தான் 'இன்று நாம் இருக்கும் நிலைமைக்கும் காரணம்' என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. கறுப்பினக் குடும்பத்தையும், கறுப்பினக் குழந்தையையும் காப்பாற்றுவதற்கு அரசு அதிக அளவு எதையும் செய்துவிட முடியும் என்பதில் சந்தேகம் இருக்கின்றது. 'நாமே செய்து கொள்ள வேண்டிய பணிகளுக்காக அரசுக்குத் தூண்டி போடுவதுதான் எம்முடைய தீர்வினை தேர்தல் அரசியலோடு இணைப்பது என்றும் அவர் கூறுகின்றார். 'நாம் இந்த இயக்கத்தை ஆரம்பித்த உடனே அரசு எதைச் செய்ய வேண்டும் என்பதைக் கூறுவோம். உடனடியாகக் கூறுவதற்கு எதுவுமில்லை.'

### அழித்தல் மட்டுமே

குறைந்த வருவாயுள்ள ஆபிரிக்க அமெரிக்கர்களை எதிர்நோக்கும் பிரச்சினைகள் மீள முடியாத அளவுக்கு சிக்கல் நிறைந்ததாக உள்ளது என்பதே ஏகோபித்த கருத்து இருந்து வருகின்றது. வீடில்லாத் திண்டாட்டம், எய்ட்ஸ்நோய், போதைவஸ்துப் பாவனைகள் என்பன சமூக சேவை முகவர்களுக்கு தாங்கமுடியாத தலையிடியைக் கொடுத்து வருகின்றன. பொலிசாரிடம் போதைவஸ்து தொடர்பான குற்றங்கள் நிரம்பி வழிகின்றன. பல நகரங்களின் உட்புற எல்லைகளிலிருந்து நடுத்தர கறுப்பின மக்கள் நகர எல்லைப் புறங்களை நோக்கி படிப்படியாக விலகிவருவதால் நகரங்களிலே குடியியல் தலைமை இல்லாமல் போகின்றது. மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தின் கறுப்பின மக்கள் தொடர்பான ஆய்வுத்திட்ட இயக்குனர் ஜேம்ஸ் எஸ்.ஜக்சன் சில காலங்களில் 'இந்த இடங்களிலே யாருமே வாழமாட்டார்கள் புல்டோசர்கள் மூலம் இந்த இடங்களை அழித்து புதிதாக ஆரம்பிக்க வேண்டியதுதான்' என்று கூறுகிறார். அதேவேளை அவர் கூறுவது போலவே நகர்ப்புறகறுப்பினக் குடும்பங்கள் பல தரப்பட்ட நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதால் 'எது எதனால் ஏற்படுகின்றது என்பதைக் கண்டு கொள்வது மிகக் கடினமாக உள்ளது'

கறுப்பின பழமைவாதிகள் குடும்ப நலன்களைப் பாதுகாப்பதும் புஷ் நிர்வாகம் முன்வைத்துள்ள மறுசீரமைப்புக்களை ஏற்றுக் கொள்வதுமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வாகும் என நம்புகிறார்கள். ஏனைய குடியரசுக் கட்சியினரைப் போலவே கெனெற்றிக்கட் பிரதிநிதி கரிபிரான்ஸ்சும் சேமநல மறுசீரமைப்புக்களையே வற்புறுத்துகின்றார். தேசிய போதைவஸ்துக் கட்டுப்பாட்டுக் கொள்கையின் முன்னாள் இணை இயக்குனரான நீதிபதி றெசிவோட்னல் கறுப்பின அமெரிக்கர்களுக்கு கல்விக் கூடங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகடினமான முறையில் சட்டத்தை அமுலாக்கல், போதைவஸ்து தொடர்பான கல்வி அதற்கான வைத்தியம் என்பன தேவையென வற்புறுத்துகின்றார் மூந்நூறு பழமைவாதக் கறுப்பின மகநூமார் கடந்த வாரம் வாஷிங்டனில் ஒன்று கூடி புதியதலைமையின்கீழான ஒரு புதிய நிகழ்ச்சி நிரல்'கறுப்பின அமெரிகளர்களுக்குவேண்டும்எனகூறியிருக்கின்றார்கள்.

அந்த மாநாட்டிலே பங்கு பற்றிய ஒருவர் 'நாங்கள் இனி மேலும் ஒரு கட்சியைச்சேர்ந்த மக்கள் அல்ல என்றசெய்தியை அறிவித்துவிட வேண்டும் என்றும கூறினார் சாதகமான நடவடிக்கைத் திட்டங்களைவிமர்சிக்கும் பிரபல்யமான செல் பிஸ்ரீல் என்பவர் கறுப்பின மக்களுக்கான உதவி என்ற பெயரால் நாட்டின் நகரங்களுக்கு அளிக்கப்படும் மீளுதவிகளை வெள்ளை இன அரசியல்வாதிகள் ஆதரிக்க மாட்டார்கள் என்று சொன்னார். இந்தச்சமூகங்களுக்கு எதிர்காலம் என்ற ஒன்றே இருக்காது' எனவும் அவர்சொன்னார். 'இதில் முக்கியம் என்னவென்றால் இதைவிட்டு வெளியேறி வேலைகளைச் செய்து பணிகளை முடிப்பதுதான்'

### கடினமாக்கல்

கறுப்பின அரசியல் வாதிகளிடையேயும் சிந்தனையாளர்கள் இடையேயும் பெரும்பான்மையாகவுள்ள சனநாயக லிபெரல் வாதிகள் விரிவான அரசாங்கத் தலையீட்டின் தேவையை வற்புறுத்துகின்றனர். கிளீவ்லன்ட் மேயரானவைட் என்பவர் (கறுப்பின அமெரிக்கர்களின் வாழ்வுக்கான விடயங்கள்) பற்றி குடியுரிமை இயக்கங்கள் பேசத்தொடங்கவேண்டுமென கூறுகிறார். பிரதிநிதிகள் சபையின் முன்னால் கொறடாவும் இப்போது ஐக்கிய நீக்ரோ கல்வி நிதியத்தின் தலைவருமான வில்கிறே என்பவர் துவக்குகளைக் கட்டுப்படுத்தவும் போதைவஸ்துப் பாவனைக்கு எதிராக கடுமையாகச் சட்டங்களை அமுலாக்கவும் சேமநலன்களை மறுசீரமைக்கவும், கல்லூரிகளை விட்டுவெளியேறும் இளைஞர்களின் நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று சொல்லியுள்ளார்.

இவை எல்லாவற்றையும் நடைமுறைப் படுத்துவதற்கு தேசிய முன்னுரிமை ரீதியில் மறு ஒழுங்கு அமைப்பு ஏற்படவேண்டும் லிபெரல்களின் வார்த்தையிலே கூறுவதானால் நகரங்களுக்கு ஒரு மார்சல் திட்டம் தேவை மனித நேயம் வரும் ஒரு காலகட்டத்தில் சமூகப்பிரச்சினைகளை தீர்ப்பதில் அரசுக்குள்ள திறமை மீது அவநம்பிக்கை ஏற்படுகின்ற நேரத்தில் எவருமே வாஷிங்டன் சரியாகச் செய்யுமென்று எதிர்பார்க்க முடியாது. இந்த நிலை கறுப்பின அமெரிக்கர்கள் முன் இரண்டு பெரிய வினாக்களை எழுப்பியுள்ளது. யார் தலைமைதாங்குவார்கள் யார் இதற்கான உதவிகளைச் செய்யப்போகிறார்கள் என்பதே அந்த வினாக்களாகும். அந்த வினாக்களின் விடைகளே இந்தப் பிரச்சினைகளை திசை திருப்பவல்லது

நன்றி நியூஸ் வீக்

## காவிரி நடுவர் தீர்ப்பு

# அமுல் படுத்தப்பட வேண்டும் இல்லையேல் போராட்டம்

# இந்தியாவிற்குள் அந்நிய ஊடுருவல் தடுப்பதற்கு புதிய சட்டங்கள் வரும்

தமிழ்மக்கள் பாதிக்கப்படுள்ளது போன்றே கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனமும் பெரும் நெருக்கடிகளுடன் தமது பணியைத் தொடர்ந்து வருகின்றது. திட்டமிட்ட ரீதியில் தேவையான செயற்கைக்கால்களை அனுப்பாமல் விடுவதோடு சில சமயங்களில் பெயரளவில, தேவையற்றதும் பழுதானதுமான செயற்கைக் கால்கள் கொழும்பில் இருந்து அனுப்பப்படுவதும் உண்டு அத்தோடு' செயற்கைக் கால்கள் உற்பத்திக்கும் பழுது பார்த்தலுக்கும் தேவையான அலுமீனியத்தகடு போன்றவற்றைக் கொண்டு வரவும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக பழைய அலுமீனியத்தகடுகளை கொண்டும் தமது பணியை ஆற்றவேண்டிய நிர்ப்பந்தம் இந்நிறுவனத்திற்கு ஏற்பட்டது.

அதாவது மூலப்பொருள் தடை எரிபொருள் தடை போன்ற பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் தமது சேவையை ஆற்றி வருகின்றது இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் இந் நிறுவனம் குறைந்த செலவில் மேற்கொள்ளும் இப்பணியானது மிகவும் நலிவடைந்த மக்களுக்கு பெருதவியாகவுள்ளது. இந் நிலையில் கடந்த ஐந்து வருட காலமாகப் பெரும் நெருக்கடியின் மத்தியல் செயற்பட்டுவரும் ஜெய்ப்பூர் செயற்கைகால் நிறுவனத்தைப் பாராட்டாமல இருக்கமுடியாது.

மேலும் நெருக்கடிகளும் யுத்தமும் தொடர்ந்து கொண்டே இருப்பதினால் ஜெய்ப்பூர் செயற்கைகால் நிறுவனத்தினரின்பங்கும்,பணியும் மக்களுக்கு மிகமிகத் தேவையாகின்றது இந்நிலையில் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்தினர் தமது சேவையை [illegible] மேலும் தீவிரமுயற்சி செய்யவேண்டும் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் தற்பொழுது தமது சேவையைப் [illegible]ன்முகப்படுத்தியுள்ள போதிலும் அதனை மேலும் விரிவாக்கவேண்டும் அதற்குப் பொதுமக்களும் பொது நிறுவனங்களும் உதவிடவேண்டியது அவசியமானதும் அவர்களின் கடமையும் கூட.

# மதுரை மாநாடு ஒருவகை அதிகார துஷ்பிரயோகம்

## - தி.மு.க. வர்ணனை

அனைத்து இந்திய அண்ணா தி.மு. கழகத்தின் மதுரை மாநாடு ஒருவகையில் அரசின் அதிகாரத் துஷ்பிரயோகம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் குறை கூறியுள்ளது.

ஆட்சியின் அலங்கோலங்களை மூடி மறைத்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே இந்த மாநாடு நடத்தப்பட்டது அரசு அதிகாரிகள் மாநாட்டுப் பணியில் மிகுதியாக ஈடுபடுத்தப்பட்டார்கள் இது கட்சி நடத்தும் மாநாடாக இல்லாமல் அரசு நடத்தும் மாநாடாக இருக்கிறது இவ்வாறு புகார் கூறப்பட்டிருக்கிறது.

# இல்லையேல் போராட்டம்

## - ராமதாஸ் அறிவிப்பு

(சென்னை)

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல் படுத்தாமல் கிடப்பில் போட்டால் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து விவசாயிகளுடன் சேர்ந்து பாட்டாளி மக்கள் கட்சி போராட்டம் நடத்தும் என்றும் அதன் தலைவர் டாக்டர் ராமதாஸ் எச்சரித்துள்ளார்.

வேலூர் சிறையிலிருந்து விடுதலையாகி வந்த டாக்டர் ராமதாஸ் செய்தியாளரிடம் பேசினார்.

விவசாயிகளுக்காகப் பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய தூக்குக் கயிறுப் போராட்டத்தில் சிறை சென்ற அனைவருக்கும் பாராட்டையும் நன்றியையும் அவர் தெரிவித்தார்.

2000 பேர் மட்டுமே இருக்கக் கூடிய வேலூர் சிறையில் 5000 பேரை அடைத்துத் தண்ணீர், உணவு, கழிப்பிட வசதியை சரிவர அளிக்க முடியாததை ராமதாஸ் கண்டனம் செய்துள்ளார்.

# மத். அரசிடம் ஊழல் புகார் மீண்டும் தரப்படும்

## - கருணாநிதி தெரிவிப்பு

[சென்னை]

அனைத்து இந்திய அண்ணா தி.மு.க அரசின் மீது மத்திய அரசிடம் ஊழல் குற்றச்சாட்டுப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

அ.தி.மு.க அரசுக்கு எதிரான ஊழல் புகார்களை ஏலவே திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது முதலமைச்சர் ஜெயலலிதா அளித்த விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை என்றும் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

# மாநில அரசின் தடை இடை நிறுத்தப்பட்டுள்ளது

(சென்னை)

தடா சட்டத்தின் கீழ் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்களை ஏனையோர் பார்வையிடுவதற்கு மாநில அரசாங்கம் விதித்திருந்த தடை உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.

முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீஸன் உட்பட தடா சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டுள்ள அனைவரையும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் தவிர ஏனையோர் சந்திப்பதை தடுக்க மாநில அரசு பிறப்பித்திருந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.க தலைவர் மு.கருணாநிதிமனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி கோவிந்தசாமி, கருணாநிதியின் வேண்டுகோளைப் பொறுத்தவரை மாநில அரசின் உத்தரவு செயற்படாமல் நிறுத்தி வைப்பதாக தீர்ப்பளித்தார். அத்துடன் நான்கு வாரகாலத்தில் பதில் மனுதாக்கல் செய்யும்படி மாநில அரசுக்கு நோட்டீஸ் அனுப்புமாறும் கேட்டுக் கொண்டார்.

# தடுப்பதற்குப் புதிய சட்டங்கள் வரும்

## - பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

இந்தியாவிற்குள் அந்நியர் ஊடுருவி வருவதைத் தடுப்பதற்காக இப்போதுள்ள சட்டங்களை திருத்துவது பற்றி மத்திய அரசு பரிசீலிக்கும் என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

அஸ்ஸாம் மாநில தலைநகர் கௌஹாத்தியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், அஸ்ஸாம் மாநிலத்திற்குள் வெளிநாட்டு ஊடுருவல் அதிகமாக இருக்கின்றது என்பதை அரசு அறிந்துள்ளது. இந்தப் பிரச்சினையை சமாளிக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இந்த மாநிலத்தில் கடந்த ஆறு மாத காலத்தில் ஓரளவுக்கு அமைதிநிலை நாட்டப்பட்டது திருப்தி தருவதாகவும் குறிப்பிட்ட அவர். பொருளாதார வளர்ச்சியில் நாட்டின் ஏனைய பகுதிகளை விட வட, கிழக்குப் பிரதேசம் இன்றும் பின்தங்கியே இருப்பதாகவும் இதற்கு சிறப்புக் கவனம் தேவை என்றும் குறிப்பிட்டார்.

# உள்ளூராட்சிமன்றங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டும்

தமிழ்நாட்டில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்தாமல் இருப்பதன் மூலம் ஜனநாயகத்தின் ஆணிவேர்கள் பலமில்லாமல் போய்விடும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

கிராம வளர்ச்சித் திட்டங்கள் நிர்வாகம் பாதிக்கப்பட்டு இத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதில் அதிகாரிகள், அரசியல் வாதிகள் ஊழலின் உறைவிடமாக மாறிவிடுவார்கள் என்றும் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

# அடிப்படை உரிமை மீறல்

(சென்னை)

நகரங்களில் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடை செய்வது தமிழக ஆளுநர் பிறப்பித்துள்ள அவசர சட்டம் அரசியல் கட்சிகளின் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கக் கூடியது

இவ்வாறு அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சியான இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தா. பாண்டியன் கூறியிருக்கிறார்.

# ஜனதாக்கட்சியும் சர்மாவிற்கு ஆதரவு

[டில்லி]

எதிர்வரும் ஜூலை பதின் மூன்றாம் திகதியன்று நடைபெறவிருக்கும் இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை ஆதரிப்பது என்று ஜனதா கட்சி தீர்மானித்திருப்பதாக புதுடில்லியில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜீவ் கொலை வழக்கு

# காரணத்தை விபரிக்க டிக்சிற்றிற்கு நோட்டீஸ்

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில, கொலைக்கு காரணமான சம்பவங்களை விபரிக்குமாறு வெளியுறவுச் செயலர் ஜே என் டிக்சிற் மற்றும் தமிழ்நாடு புலனாய்வுத் துறையின் முன்னாள் தலைவரான கே. மோகன்தாஸ் ஆகியோருக்கும் ஜெயின் விசாரணை மன்றம் நோட்டீஸ் உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. இதற்கென மூன்று வாரகால அவகாசம் இவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் நீதிபதி ஜெயின் கூறியுள்ளார்.

## ஜெயலலிதா அரசினால்

# புலிகள நடவடிக்கைகளை முற்றாகதடுக்க முடியவில்லை

(சென்னை)

விடுதலைப்புலிகள் நடவடிக்கையை முற்றாகத் தடை செய்ய ஜெயலலிதா அரசு தவறிவிட்டது என்று பாரதிய ஜனதாக்கட்சி குறை கூறியுள்ளது. பாரதிய ஜனதாக் கட்சியிற் துணைத்தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்து ஆலோசிப்பதேஇல்லை என்றும் மேலும் தகுந்த அரசியல் ஆலோசகர் இல்லாததும் சட்ட சபையில் எதிர்க்கட்சியினரின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருப்பதும் தமிழக அரசின் தெளிவற்ற நிலைக்குக் காரணமென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளா[illegible]

ஈழநாதம்

# தொண்டர் ஆசிரியர் நியமனம் நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(கொழும்பு)

வட மாகாணத்தில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களை ஏனைய மாகாண தொண்டர் ஆசிரியர்களைப் போல நிரந்தரமாக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியும், கல்வி அமைச்சருமான ஆர். பிரேமதாசாவிடம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்துவதற்காக கல்விச் சேவைகள் சபையின் தலைவரோ அல்லது உறுப்பினரோ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம் வரமுடியும் என்று அந்த வேண்டுகோளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அல்லது பின்வரும் மாற்று வழிகளை தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

★ மேற்படி நேர்முகப் பரீட்சை நடத்தும் பொறுப்பை மாகாண அமைச்சிடம் ஒப்படைப்பது.

★ அமைச்சிலுள்ள அதிகாரிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பது.

★ வட மாகாணத்திலுள்ள கல்விப் பணிப்பாளர்கள் கொண்ட சபை மூலம் பரீட்சையை நடத்துதல்.

மேற்படி யோசனைகளில் ஒன்றை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் செயலாளர் அலஸ் ஆகியோரை விரைவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

ஜூலை முதற்பகுதியில் கம் உதாவலைபவம் முடிவடைந்ததும் இது பற்றிச் சாதகமான முடிவு எடுக்கப்படும் என்று கல்வி சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் ஏ. எஸ். வீரரத்தன தன்னிடம் தெரிவித்ததாகவும் மகாசிவம் தெரிவித்தார்.

## ‘வெளிச்சம்’ வெளிவந்தது

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினரால் வெளியிடப்படும் வெளிச்சம் இதழின் வைகாசி/ஆனி மாத இதழ் வெளிவந்துள்ளது. இவ் இதழில் மேஜர் பாரதி கருணை மணி, தா. இராமலிங்கம் உலக நாடன், மயிலன், ஜெ. சி. ஜெயசீலன் ஆகியோரின் கவிதைகளும், பொன் பூலோகசிங்கம், அங்கவ நாகராஜன், ச. தலேஸ்வரன், சபா ஜெயராசா, கரும்பறவை, என். சண்முகலிங்கன், கோ. மகேந்திரராசா ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளது.

## அனுமதிபத்திரம் பெறவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தமது துவிச்சக்கரவண்டிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

இவ் அனுமதிப்பத்திரங்களை மிக விரைவில் பெற்றுக் கொள்ளுமாறும் பெறத்தவறுவோர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்படி பிரதேச சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பா)

# ஆரம்ப ஆசிரியர் தெரிவு பரீட்சை குறித்து குழப்பம்

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை யாழ் மாவட்டத்தில் நடைபெறுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெறுமென ஏற்கனவே பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருக்கிறது. எனினும் இம் மாவட்டத்தில் இப்பரீட்சையை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. யாழ். கல்வித் திணைக்களத்தின் பரீட்சைப்பகுதியினருக்கு மேற்படி போட்டிப் பரீட்சையை நடாத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இப்போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களும் ஏனைய காகிதாதிகளும் அனுப்பி வைக்கப்படும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் கூறியதாக அமைச்சிலிருந்து திரும்பிய யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பிரேஷ் அதிகாரி ஒருவர் கூறினார். ஆனால் இவற்றை அனுப்பிவைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தகவல் எதுவுமில்லை. அதேவேளை இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படும் ‘குமண’ என்ற கப்பலிலும் வினாத்தாள்கள் எடுத்துவரப்படவில்லையென்று கூறப்படுகிறது.

இவ்வினாத்தாள்களை எடுத்துவருவது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமோ அல்லது கூட்டுப்படைகளின் தலைமையலுவலகத்திடமோ பரீட்சைத் திணைக்களத்தினால் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. யாழ் கல்விப் பணிப்பாளருக்கும், பரீட்சை ஆணையாளருக்கும் இடையிலும் இவ்விடயம் தொடர்பாக கருத்துப்பரிமாறல்கள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. இந்த நிலையில் இப்பரீட்சை இம்மாவட்டத்தில் நடைபெறுமா என்ற சந்தேகம் பரீட்சார்த்திகளிடையே வலுப்பெற்று வருகிறது. (அ)

## வெற்றிலைக்கேணி பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் வெற்றிலைக்கேணி பகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மேற்படி இராணுவ நடவடிக்கை காரணமாக இயக்கச்சி, மாசார், சங்கத்தானவயல், கோவில் வயல் ஆகிய பகுதிகளில் இருந்தும் இப்பகுதிகளை அண்டிய பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இம்மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லும் வரை உலர் உணவுநிவாரணம் வழங்கப்படவேண்டும். இதனால் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்விபரங்கள் செயலகத்திற்கு கிடைத்ததும் உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக யாழ் செயலகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன (பா) (அ)

# இனப்பிரச்சினை தீர்வு ஐ.தே.க.குழு அமைப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி ஒரு குழுவை நியமித்துள்ளது. பல்வேறு அமைச்சர்களும், எம்பிக்களும், மற்றும் ஐ.தே.கட்சியினரும் வழங்கிய ஆலோசனைகளை ஆராய்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக் குழு முன்வைப்பதே இக்குழுவினர் நோக்கமாகும். பிரதமர் டி.பி விஜயதுங்கவின் தலைமையிலான இக் குழுவினர் எதிர்வரும் பதின் நான்காம் திகதி பிரதமர் அலுவலகத்தில் முதல் தடவையாக கூடவுள்ளனர்.

## தென்னாசிய பிராந்திய வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாடு கொழும்பில்

சார்க் எனப்படும் தென்னாசியப் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பு வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாடு எதிர்வரும் புதன், வியாழக் கிழமைகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. உறுப்பு நாடுகளுக்கு இடையே பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்தும் வகையில் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையை உருவாக்குவதுடன், சுயேட்சையாக இயங்கும் வறுமை ஒழிப்பு கமிசனின் முன்னேற்றம் பற்றியும் பரிசீலிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## யாழ்ப்பாண

ஆனால் இதில் மூதல் இரண்டு அணிகளும் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட படை நகர்வலாகும். இவ்விரு முனைகளிலும் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்தபோது மூன்றாவதுபடை நகர்த்தலை செய்து அடுத்த போர் முனையையும் சிறிலங்கா இராணுவ தரப்பு உருவாக்கியுள்ளது.

இதே வேளை, சிறிலங்கா இராணுவத்தரப்பினர் எதிர்பார்த்த மாதிரி விரைவாகவும் இலகுவாகவும் இப் போர் முனைகள் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. புலிகளின் கடும் எதிர்ப்பின் காரணமாக இராணுவத்தினரின் முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## தடை செய்யப்பட்ட பொருள் கொண்டுவந்தோர் கைது

தடை செய்யப்பட்ட பொருள் கொண்டு வந்த இருவர் தாண்டிக்குளம் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா நகரிலிருந்து சிறிலங்கா அரசினால் வடபகுதியில் தடை செய்யப்பட்ட பொருள்கள் சிலவற்றைக் கொண்டு வந்தவர்களை தாண்டிக்குளம் சோதனை நிலையப் பகுதியில் வைத்து இராணுவம் கைது செய்தது.

யோகராஜா என்ற பத்தினியார் மகிழங்குளத்தைச் சேர்ந்தவரையும், நடராஜ செல்வம் என்ற கிடாச்சூரியைச் சேர்ந்தவரையுமே இராணுவம் கைது செய்தது.

தற்போது இவர்கள் இருவரும் தாண்டிக்குளம் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இதே மாதிரி கைதானவர்கள் பலர். அம் முகாமில்

## இலங்கை செஞ் சிலுவைச் சங்கம், யாழ்கிளை, தலைமையகம்

### உதவித்தாதி பயிற்சிநெறி

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கணவனை இழந்தோர், விதவைகள், ஊனமுற்றோர், அநாதைகள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் 16 - 07 - 92 வியாழக்கிழமைக்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். 18 - 07 - 92 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
03 - 07 - 92

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
[சி/4654]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



## யாழ். இந்துக்கல்லூரி அன்னை உதிரம் வடிக்கின்றாள்

எமது அன்னை மண்மீட்புப் போரில்
தனது புகழ்பூத்த
மைந்தன் ஒருவனை மேலும்

இன்று

கப்டன் ஜெயந்தன் (கருப்



தெல்லிப்பழையைச் சேர்ந்த
## அமரர் திருமதி முருகேசு காந்திமதி

அன்னை மடியில் : 03 - 03 - 1933
ஆண்டவன் அடியில் : 05 - 06 - 1992

எமது தாயாரின் அந்தியேட்டிக்கிரியையும் வீட்டுக்கிருத்தியமும் இன்று 05-07-1992 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கின்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்

பிள்ளைகள் : ராதா மோகன், சாந்தரூபன், மதனரூபன் — பிரான்ஸ்
ராதிகா (அனிதா)
சுதந்திரரூபன் (சந்துரு) மாணவன் யூனியன் கல்லூரி

மருமக்கள் : பேள்ரஞ்சினி, ஸ்ரீலதிகா — பிரான்ஸ்

பேரப் பிள்ளைகள்; நிருஜன், நிரூபன், ஸ்ரொப்பான், கிரஃபி — பிரான்ஸ்

'ஜெகதர பவனம்'
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

-திருமதி நா. பொன்னுத்துரை

(2766)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

மைந்தன் ஒருவனை மேலும்
அர்ப்பணித்துள்ளாள்.

## வீரவேங்கை காஸ்ரோ
(சோமசுந்தரம் கமலநாதன்)


உன்னால் நாம் கௌரவம் அடைந்தோம்
உன்வழியில் நாம் நூற்றுக்கணக்கில்தொடர்வோம்.

யாழ் இந்துக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(சி-4655)

## 31-ம்நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் ; 29 — 08 — 1918



ஆண்டவன் அடியில் : 05 — 06 — 1992

## அமரர் ஆறுமுகம் கைலாசபிள்ளை
[ மார்க்கண்டு ]

சிறுப்பிட்டி செல்வவிநாயகர் ஆலய முன்னைநாள் அறங்காவலரும், தற்போதைய பரிபாலன சபையின் சிரேஷ்ட உறுப்பினருமான ஆறுமுகம் கைலாசபிள்ளை அவர்களின் 31 ஆம் நாள் சபிண்டீகரணத் தினமாகிய இன்று பரிபாலன சபையின் ஆழ்ந்த கவலையை அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய அவர்களுடன் சேர்ந்து பிரார்த்திக்கின்றோம்.

செல்வ விநாயகர் ஆலயம் -பரிபாலன சபையினர்
சிறுப்பிட்டி,
05 - 06 - 1992. (2762)

### ராணுவ

கேட்டபோது தமிழ் மக்கள் மறுத்துவிட்டனர் இந்நிலையினால் இராணுவத்தினர் தமிழ் மக்களை பலவந்தமாக குடியேற்றி வருகின்றனர்.

இவர்களின் குடியிருப்புக்களைச்சூழ பொலிஸ் நிலையம் சிங்கள முஸ்லிம் குடியேற்றங்கள் இடம் பெற்று வருகின்றன

### க. பொ. த.

சாத்தியமில்லை.

அதேவேளை பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு மாதம் ஒருதடவைமட்டுமே சப்பல் வந்துசெல்வது வழமை இக்கப்பல் நாளை இங்குவந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது இக்கப்பல் மீண்டும் கொழும்பு சென்று திரும்புவதற்கு நீண்டகாலதாமதம் ஏற்படும். இதனால் கப்பல் மூலம் வினாத்தாள்கள் எடுத்து வரப்படுவது என்பதும் சாத்தியமில்லை இந்த நிலையில் மாற்றுவழிவகைகள் குறித்து ஆராய்வதற்காகவும், இம்மாவட்டத்தில் பரீட்சை நடாத்துவதற்குரிய சூழ்நிலைகள் குறித்து பரீட்சைத்திணைக்கள அதிகாரிகளுக்கு விளக்குவதற்காகவும் கல்விப்பணிப்பாளரின் கொழும்பு விஜயம் பயன்படும். (க) (பா)

### வீரச்சாவு

படையினர் மீதான வெற்றிகர தாக்குதலில் லெப்டினன் நீலவாணன் (பாலசுந்தரம் பாலச்சந்திரன் சாம்பல் தீவு, திருக்கோணமலை) வீரச்சாவு அடைந்தார்.

இத் தாக்குதலில் விழுப்புண் அடைந்த லெப்டினன் மல்லன் (வீபன், சுந்தரலிங்கம் சசிக்குமார். கள்ளிமேடு, தம்பலகாமம்) 04- 7-1992 அன்று வீரச்சாவு அடைந்தார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### இன்று

கப்டன் ஜெயந்தன் (கருப்புக்குட்டி பதிமநாதன் மட்டக்களப்புவீரச்சாவு05-05-91] ஆகிய வீரமறவர்களும் இணைந்து கொண்டனர்.

இந்த உணர்வோடுதான் இன்று ஒவ்வொரு விடுதலைப் புலியும் போராடிக் கொண்டிருக்கின்றான் எமது தாயக விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதற் கரும் புலியின் நாளாகிய இன்று இதுவரை கரும்புலிகளாக வீரச்சாவடைந்த எட்டுக் கரும்புலிகளையும் நினைவு கொள்கின்றோம்.

இக் கரும்புலிகளின் நினைவாக பிரிவு ரீதியாக நினைவு கூட்டங்கள் முறையே:-

வலிகாமம் திவகம் பிரிவு மானிப்பாய் மாவீரர் அரங்கு.

வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

தென்மராட்சி பிரிவு

ஆகிய இடங்களில் குறித்தபடி இரவு 7 - 30 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டது.

இதே மாதிரி மைதானங்கள் பலர். அம் முகாமில் நீண்ட நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

### குமண

மேலும் இக்கப்பல் யாழ். போதனா வைத்திய சாலைக்குத் தேவையான எரிபொருட்களும், மருந்துவகைகளும், பால் போத்தல், உணவு மற்றும் விவசாயிகளுக்கான உரங்களும் எடுத்துவருகின்றது (பா) (எ)

### வீரச்சாவு இளம்பிறை

வெளி மோதலில் விழுப்புண் அடைந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் 04-07-92 அன்று வீரச்சாவு அடைந்தார். வீரச்சாவடைந்தவர் வீரவேங்கை மருதன். (அந்தோனிப்பிள்ளை ரொபின்ஜோன்சன் கன்னாட்டி. வவுனியா) என்னும் போராளியாவார்

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

04 07. 1992

எமது பகுதியில் உள்ள கடைசி இலக்கம்:- 4709

இராணுவம் வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள் :-

24 4957, 26-7949, 28-2156, 26-338, 24-1259, 27-8'25, 26-767, 26-2063 26-9797. 24-6448, 24-6759, 24-9758, 41-9200, 26-8674, 26-5823, 37-914, 36-2489, 26-1263, 27-8179 26-5244, 40-3089, 24-8203, 27-6415, 26-380 36-3630, 36-5599. 36-1191 36-16, 25-3180, 25-5997, 25-9390 25-5091 25-9657, 36-3438, 25-7508, 73-6877, 70-2919, 70-9642

வட பகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

27-5045. 26-1169. 28-1414, 28-1025, 42-9345, 26-8389, 26-5846, 42-2397. 24-336. 26-6983, 27-9030, 28-3479 28-425, 26-5870. 42-3339 40-2573, 41-5199, 24-9338 26-3628, 27-3910, 22-8096, 36-924, 25-6900. 36-8979